அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 160 /2017
தேதி : 18.12.2017

**ஆளுநர் – அரசியல் தலைவர்கள் கருத்து வேறுபாடு துரதிர்ஷ்டவசமானது.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.**

தமிழகத்தின் ஆளுநராக மாண்புமிகு பன்வாரிலால் புரோகித் அவர்கள் பொறுப்பேற்றது முதல், அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு வருவது பெரும் சர்ச்சைகளை எழுப்பி வருகிறது. அதன் அடுத்தகட்டமாக, சில அரசியல் கட்சிகள் அவர் செல்லும் இடங்களில் கருப்பு கொடி காட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

முதன்முதலாக, அவர் கோவையில் இப்படிப்பட்ட ஆய்வுப்பணிகள் மேற்கொண்டபொழுதே, அது அவரது அதிகார வரம்பிற்கு உட்பட்டதா என்ற கேள்விகளும், அப்படியே அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக இருந்தாலும் அது மரபை மீறிய செயல் என்றும் விமர்சனங்களும் எழுந்தன. இத்தகைய விமர்சனங்கள் தொடர்ந்தாலும், அடுத்தடுத்து நெல்லையிலும், அதன் பின்னர் கடலூரிலும், இன்று சேலத்திலும், அரசியல் கட்சிகளின் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே அவரது ஆய்வுப்பணிகள் தொடர்கின்றன.

கடலூரில் ஆய்வுப்பணிகள் முடித்து விட்டு சென்னை வரும் வழியில் அவரது பாதுகாப்பிற்காக சென்ற பைலட் வாகனம் மோதி 3 பேர் உயிரிழந்த சம்பவமும் விமர்சனத்திற்கு உள்ளாகி இருக்கிறது. ஆளுநர் மாளிகையில் இருந்து, ஆளுநரின் நடவடிக்கைகளை அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்களாக நியாயப்படுத்தி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



தமிழகத்தில் ஆளுநரின் ஆய்வு நடவடிக்கையும், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அரசியல் கட்சிகளின் கண்டன போராட்டங்களும் நடைபெறுவது துரதிர்ஷ்டவசமானது. சமத்துவ மக்கள் கட்சி சார்பில் நான் ஏற்கனவே, ஆளுநரின் அதிகார வரம்பை கேள்விக்குள்ளாக்காமல், மரபை மீறிய செயல் என்ற அடிப்படையில் அவர் இது போன்ற ஆய்வுப் பணிகளை தவிர்த்திட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

ஆனால், தொடர்ந்து அவரது ஆய்வுப் பணிகளும் அதற்கு எதிரான அரசியல் போராட்டங்களும் நடைபெற்று வருவது, மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பைக் குறைப்பதாகும். தமிழக அரசு உடனடியாக இது போன்ற குழப்பநிலை நீடிப்பதை தவிர்க்கும் விதமாக, ஆளுநருடன் ஆலோசித்து உடனடியாக முடிவு காண வேண்டும். மாண்புமிகு ஆளுநர் அவர்களும் இது போன்ற உரசல்களை தவிர்க்கும் விதமாகவும், அரசு நிர்வாகத்தில் குழப்பங்கள் ஏற்படாத வகையிலும் அவரது நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கோரிக்கை விடுக்கிறேன்.

அரசியல் இயக்கங்கள் ஆளுநரின் நடவடிக்கைகள் குறித்து விமர்சனங்கள் செய்வதற்கு உரிமைகள் இருக்கும் அதே நேரத்தில், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதன் மூலம் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com